**செய்தி வெளியீடு எண் : 1802** **நாள் : 14.10.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**இராமநாதபுரம், அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு ரூ.4.79 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் மற்றும் கடலூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல் தளம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (14.10.2022) தலைமைச் செயலகத்தில், சமூகப் பாதுகாப்புத் துறை சார்பில், இராமநாதபுரம், அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 4 கோடியே 79 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் மற்றும் கடலூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல் தளம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் சமூகப் பாதுகாப்புத்துறை மாநிலத்தில் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பிற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்படி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை பராமரிப்பதற்கென குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் / முரணாக செயல்பட்ட சிறார்களின் பராமரிப்பு, மறுசீராக்க நடவடிக்கைகளுக்காக அவர்களை தங்கவைப்பதற்கு அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், அரசினர் சிறப்பு இல்லங்கள், அரசினர் பாதுகாப்பு இடம் ஆகிய குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. அரசால் நடத்தப்படும் இக்குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 4 கோடியே 79 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் 17,372 சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்த இல்லத்தில், 75 குழந்தைகள் தங்கி பயன்பெறும் வகையில் குழந்தைகள் தங்கும் அறைகள், சமையலறை, உணவுக் கூடம், அலுவலக அறை, பார்வையாளர் அறை, வகுப்பறைகள், பயிற்சி அறை, பல்நோக்கு அறை, கழிவறைகள் மற்றும் குளியலறைகள் என அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் கொண்டதாக இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், கடலூரில் செயல்பட்டு வரும் அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடத்தில் 4736 சதுரஅடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் செலவில் முதல் தளம் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய தளத்தில் பொழுதுபோக்கு அறை, சிறார்கள் தங்கும் இரண்டு அறைகள், உளவியல் ஆலோசனை அறை, இரண்டு பயிற்சி அறைகள், பதிவறை, குளியலறைகள், கழிவறைகள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை இயக்குநர் திருமதி ச. வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in